# இளைஞர்கள் முதல்வரை ‘அப்பா’ என்கிறார்கள்! எதிரிகள் ‘அப்பப்பா’ என்கிறார்கள்!

## வானகரத்தில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னின்று நடத்திய முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழாவில் கவிப்பேரரசு வைரமுத்து புகழாரம்!

சென்னை, மார்ச் 16–

**இளைஞர்கள் முதலமைச்சரை ‘அப்பா’ என்கிறார்கள் - எதிரிகள் ‘அப்பப்பா’ என்கிறார்கள் என மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா. சுப்பிரமணியன் முன்னின்று நடத்திய கழகத் தலைவரின் 72வது பிறந்தநாள் விழா கவியரங்கில் கவிப்பேரரசு வைரமுத்து புகழாரம் சூட்டினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழா சென்னைத் தெற்கில் கடந்த பிப்.27அன்று மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வானகரத்தில், மதுரவாயல் தெற்குப் பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் கணபதியின் சிறப்பான ஏற்பாட்டில் ‘சுட்டுவிரலில் வெற்றிப்படைக்கும் சூரியன்’ எனும் தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது.

இக்கவியரங்க நிகழ்ச்சிக்கு சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலை வகித்தார். கவிமாமணி அப்துல்காதர் தலைமை வகித்தார். கவிப்பேரரசு வைரமுத்து தொடக்க உரையாற்றினார். ‘உலகம் அதிர உரிமைக் கேட்பவன்’ எனும் தலைப்பில் கவிஞர் பொன்.செல்வகணபதி, ‘உண்மையான புரட்சி புரிபவர் கவிஞர் நெல்லை ஜெயந்தா, ‘நன்மைகள் யாவும் நாட்டில் வடிப்பவன்’ – கவிஞர் சொற்கோ கருணாநிதி, ‘நாடுபோற்றும் நற்றமிழ் நாயகன்’ கவிஞர் இளையகம்பன், ‘வீடெங்கும் விடியல் படைப்பவன்’ - கவிஞர் முத்துவேல்ராமமூர்த்தி ஆகியோர் கழகத் தலைவரின் சிறப்புகளைப் பட்டியலிட்டனர்.

### தொண்டர்கள் மகிழும் தலைவரின் பிறந்தநாள்!

இந்நிகழ்வில் கவிப்பேரரசு வைரமுத்து ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு:

ஒரு தலைவனுக்குப் பிறந்தநாள் எடுக்கிற நிகழ்வு, தமிழ்நாட்டைத் தவிர இந்தியாவில் வேறெங்கும் கண்டதில்லை. இத்தனைப் பெருமக்கள் கூடிநின்று ஆரவாரம் செய்கிற பெருநிகழ்ச்சியும் வேறெந்த மாநிலத்திலுமில்லை. எடுத்த பெருமகனுக்கும், என் வாழ்த்து. தொடுத்த உங்களுக்கும் என் வாழ்த்து. ஒரு கவிதைப் படித்தால் ஒரு ஆள்அரவம் இருக்காது என்பதுதான் உலக வழக்கு. ஆனால் நீ படி, கைத்தட்ட நானிருக்கிறேன். ஒரு கவிதைச்சொல் விசிலடிக்க காத்திருக்கிறேன். நீ கவிதைப்பாடு எங்கள் உடல்மொழியால் உங்களைத் தாலாட்டக் காத்திருக்கிறோம் என்று ஒரு தமிழ்ப்பெருங்கூட்டம் கூடியிருக்கிறதே.

இந்த அழகை எங்கும் காணமுடியாது. இந்தக் கவியரங்க கலாச்சாரத்தை ஏற்படுத்திக்கொடுத்த தமிழாசான், மூதறிஞர், கலைஞர் அவர்களை நன்றியோடு நினைத்துப்பார்க்கிறேன். அந்தத் தலைமகன் இல்லாவிட்டால் கவிதைக் கேட்க தமிழ் மக்கள் இவ்வளவு பேர் கூடியிருக்கமாட்டீர்கள். உங்கள் கரங்கள் இணைந்து அடிக்கடிக் கைத்தட்டுகிற இந்தக் காட்சியை நாங்கள் பார்த்திருக்க முடியாது. இந்தக் கைத்தட்டல்கள் எல்லாம் என் மூத்தத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞருக்கே காணிக்கைசெய்ய வாய்ப்பளித்த எங்கள் மா.சு. அவர்களுக்கு என் வணக்கத்தை, நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### ஆண்டுதோறும் அழைக்கும் மா.சு.!

ஆண்டுக்கொருமுறை மா.சு. எங்களை அழைக்கிறார். கலைஞர் பிறந்தநாளானாலும் சரி, தளபதி பிறந்தநாளானாலும் சரி, கவிஞர்கள் எங்களோடு இருக்க வேண்டும். கவிஞர்களோடு நாங்கள் இருக்க வேண்டும் என்ற ஒரு சங்கல்பத்தை அவர் வைத்திருக்கிறார். உங்களுக்குத் தெரியாது அவரைப் பார்த்தல் தோற்றம் ஒரு கல் மாதிரி இருக்கும், ஓடி, ஓடி, தசைகள் இறுகி உடம்பு செதுக்கப்பட்டு ஒரு கல் மாதிரி இருக்கிறார். அந்தக் கல்லுக்குள் இருக்கிற கவிதை ஈரம் எங்களுக்குத்தான் தெரியும். அவரைப் பார்த்தால் ஒரு நிலக்கரி மாதிரி இருக்கிறார் என்னைப் போல; ஆனால் நிலக்கரியில் இருக்கிற வைரம் எங்களுக்குத்தான் தெரியும். ஒரு கடலைப்போல் நீலமாக இருக்கிறார். உள்ளே இருக்கிற தமிழ் முத்துக்கள் எங்களுக்குத்தான் தெரியும். அந்தப் பெருமகன் எங்களை அழைத்திருக்கிறார். அது எங்களுக்குப் பெரும் வாய்ப்பாக இருக்கிறது.



தளபதியின் காலம் தமிழ்நாட்டிற்கு ‘பொற்காலம்’ என்பதை அறிவுஜீவிகள் நாங்கள் ஆயிரம் சபைகளில் அடித்துச் சொல்வோம். இந்தக் கவிஞர் பெருமக்கள் மட்டுமல்ல. தமிழ்நாட்டுப் பெருமக்கள் சொல்கிறார்கள். தமிழ்நாட்டுப் பள்ளிக்கூட மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் சொல்கிறார்கள் எங்களுக்குப் பொற்காலம் என்று. இந்தப் பொற்காலம் எப்படி உருவாகிறது? என்று சொன்னால், தளபதிகள் ஈட்டிக்கொடுக்கிற தொண்டுகளால், செயல்களால், வீரியமிக்க காரியங்களால், தளபதியின் புகழ் நாளுக்குநாள் கூடிக்கொண்டேப் போகிறது.

வள்ளுவர் சொல்கிறார். நீர்ப்பூவின் உயரம் என்பது என்ன? நீர்ப்பூவின் உயரம் என்பது தண்ணீரின் உயரம்தான். தண்ணீரின் உயரத்திற்கேற்பதான் ஓர் அல்லிப்பூ, தாமரைப்பூ, நீர்ப்பூ மேலே உயருகிறது. தண்ணீர் உயரம் குறைந்துபோனால் பூவின் உயரம் குறைந்து போகிறது.

**“வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு”**

என்று வள்ளுவர் சொல்கிறார். இங்கு நீர்மட்டம் என்பது எதுவென்றால் மா.சு. போன்றவர்கள், தா.மோ.அன்பரசன் போன்றவர்கள்தான். நீர்மட்டம் கூடிக் கொண்டேப் போகிறது என்பதை சொல்லியே ஆக வேண்டும். இந்தப் புகழ் எல்லாம் தமிழ்நாடு அரசிற்கு, தமிழ்நாட்டு அரசிற்கு ஏற்படுகிற கீர்த்தியெல்லாம் தளபதிக்கு. தளபதிக்கு ஏற்படுகிற புகழ் எல்லாம் இந்த தமிழ்நாட்டு மக்களுக்கு. தமிழுக்கு, இந்த மண்ணுக்கு என்று நாங்கள் கொண்டாடுகிறோம். மா.சு. அவர்கள் மருத்துவத் துறைக்கு வந்தப் பிறகுதான் மருத்துவத் துறை சவுக்கியமானது. மருத்துவத் துறை நோயுற்றியிருந்தது. அந்த நோயுற்ற மருத்துவத் துறைக்கு ஒரு சிகிச்சைக் கொடுத்து, அதை ஆரோக்கியமாக்கியவர் நம்முடைய மா.சு. என்றால் அதில் மிகையொன்றுமில்லை.

### இந்த அரசின் பெருமைகளை உணர்வீர்!

மிகையாகப் பேசுவதற்கு பழக்கப்படாதவன். எம்மொழி மிகையாகப் பேசுவதற்கு உடன்படாதது. மிகையாகப் பேசுவதற்கு உண்மை வெகுதூரத்திலிருக்கிறது என்று பொருள். இந்த உண்மையை நான் அறியாதவனல்ல. அதனால் நான் பேசுவதெல்லாம் சத்தியத்திற்கு பக்கத்திலிருக்கிற வார்த்தைகள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அப்படி புரிந்துகொண்டால்தான் மா.சு.வின் பெருமைகளையும், தளபதியின் பெருமைகளையும், இந்த அரசின் பெருமைகளையும், மக்களுக்கு உணர்த்த முடியும். உணரவும் முடியும் என்பது என் எண்ணம்.

மா.சு. பதவியிலிருந்து செய்தது கொஞ்சநெஞ்சமல்ல. மக்களைத் தேடி மருத்துவம் என்கிறத் திட்டம். இந்தத் திட்டத்தால் பயன்அடைந்தவர்கள் எண்ணிக்கையைச் சொன்னால் இந்த சபை போதும் என்று சொல்லும் வரை கைத்தட்டும். மக்களைத் தேடி மருத்துவத்தில் 4 கோடியே 40 லட்சம் பேர் இதுவரை பயன்பெற்றிருக்கிறார்கள். தமிழர்களின் எண்ணிக்கை 8 கோடி பேர் என்றால், சரி பாதிக்கு சரிபாதி மா.சு.வின் திட்டத்தால் மக்கள் பயன்பெற்றிருக்கிறார்கள் என்று பொருள்.

தமிழ்நாட்டு மக்கள் தொகையில் பாதியை நீங்கள் நாடித்தொட்டுப்பார்த்திருக்கிறீர்கள். இருதயம் தொட்டுப் பார்த்திருக்கிறீர்கள். கண்ணைத் தூக்கிப் பார்த்திருக்கிறீர்கள். கல்லீரல் சரியாக இருக்கிறதா? என்று பார்த்திருக்கிறீர்கள். கிட்னி சரியாக இயங்குகிறதா? என்று பார்த்திருக்கிறீர்கள். அவர்கள் கண், காது, மூக்கு, தொண்டை சரியாக இருக்கிறதா? என்று பார்த்திருக்கிறீர்கள். ஒரு நாட்டின் நலம் என்பது உடல்நலமும், மக்கள் வளமும்தான் நாட்டின் நலம். உடல்நலம், மனித வளம் இந்த இரண்டும் இல்லையென்றால் நாடு வெறும் பூகோளம்தான். நாடு என்பது வெறும் நிலப்பரப்புதான். நாடு என்பது கல்லும், மண்ணும், முள்ளும், கரடும், முரடும், நதிகளும், கடலும்தான். மனிதன் இல்லாவிட்டால் மனிதன் ஆரோக்கியமாக இல்லாவிட்டால், அந்த நாட்டிற்கு ஏது பயன்.

உலக நாடுகள் அளவில் ஐக்கிய நாட்டு சபையில் விருதை தமிழ்நாட்டிற்குப் பெற்றுக்கொடுத்திருக்கின்றார் நம்முடைய தமிழ்நாட்டின் தலைமகன் மா.சு. அவர்கள். இந்த கரவொலியெல்லாம் அவருக்கு செலுத்துகிற காணிக்கை.

### அதிகம் நேசிக்கப்படும் முதல்வர் மருந்தகம் திட்டம்!

‘இன்னுயிர் காப்போம்’ திட்டத்தில் 3 லட்சத்து 41ஆயிரம் பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். ரூ.300 கோடியை அரசு செலவு செய்திருக்கிறது. ‘இதயம் காப்போம்’ திட்டத்தில் ரூ.3 கோடியே 37 லட்சம் பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். இவை எல்லாவற்றையும்விட, காலையில் நான் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்தபோது, அவரிடம் நான் சொன்ன ஒரு கருத்தை, இந்த மன்றத்தில் மீண்டும் பதிவுசெய்யக் கருதுகிறேன்.

நீங்கள் கொண்டுவந்தத் திட்டங்களில் அதிகம் நேசிக்கப்படுகிறத் திட்டம் “முதல்வர் மருந்தகம்” திட்டம் என்று. நீங்கள் ஒரு பொதுமருந்து நிலையத்திற்குச் சென்று ரூ.100க்கு மருந்து வாங்குகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அதே மருந்து விலையில் 75விழுக்காடு குறைத்து ரூ.25க்கு முதல்வர் மருந்தகத்தில் கொடுக்கிறார்கள். அதே நிறத்தில், அதே தரத்தில், அதே உறுதியில், அதே நலம் பெருகிற ஆற்றலில் அதே மருந்து விலை 75 சதவிகிதம் குறைத்து, வழங்கப்படுகிறது. இது மக்கள் அரசா? நடுத்தர மக்கள் அரசா? இது பாமர மக்களின் அரசா? இதுதான் தமிழர்களின் சுத்தமான அரசு என்று நாம் கொண்டாடுகிறோம். எல்லாவற்றையும்விட நான் அண்மையில் கேள்விப்பட்ட ஒரு நல்ல செய்தி. மா.சு.விற்கு நாம் நன்றி சொல்ல வேண்டும்.

டயாலிசிஸ் என்பது என்ன? என்று உங்களுக்கு பலபேருக்குத் தெரிந்திருக்கும். சில பேருக்கு தெரியாமலிருக்கலாம். சர்க்கரை நோய் உடலில் கூடிவிடுகிறது. அந்த சர்க்கரையை, ரத்தத்திலிருந்து பிரித்தெடுக்கிற உறுப்பு கிட்னி. சிறுநீரகம், மனிதனுக்கு இரண்டு இருக்கிறது. எது? எது? முக்கியமான உறுப்போ, அதை இரண்டு உறுப்புகளாகப் இயற்கைப் படைத்திருக்கிறது. காது இரண்டு. கண் இரண்டு. கை இரண்டு, கால் இரண்டு. உடம்பினுள் உள்ள உறுப்பு கிட்னி இரண்டு. இதயம் இரண்டல்ல. கல்லீரல் இரண்டல்ல. கணையம் இரண்டல்ல. ஆனால் கிட்னி மட்டும் இரண்டு.

ஆம். இந்த இரண்டு கிட்னியும் பழுதாகிப்போனால் இரத்தத்தில் சர்க்கரைக் கூடிக்கொண்டே போனால், மனிதனை மரணத்திற்குப் பக்கத்தில் அழைத்துச் செல்லும். ரத்தத்தில் உள்ள சர்க்கரையை எந்திரம் கலைக்கிறது. கிட்னி செய்யும் வேலையை எந்திரம் செய்கிறது. இந்த எந்திரம் என்ன செய்கிறது தெரியுமா? உள்ளிருக்கும் இரத்தத்தை வெளியே எடுத்து சுழற்றுகிறது. அப்படி சுழற்றும்போது இரத்தத்தில் உள்ள சர்க்கரை கலைக்கப்படுகிறது. மீண்டும் சுத்திகரிக்கப்பட்ட ரத்தம் உடலிற்குள் செல்கிறது. இதுதான் டயாலிசிஸ். இந்த டயாலிசிஸ் எந்திரத்தின் விலை இருபதாயிரம் ரூபாய், எண்பதாயிரம் ரூபாய், லட்ச ரூபாய் இருந்தது. இப்போது இந்த விலைக் குறைந்து ரூ.15 ஆயிரம் ரூபாய்க்கு வந்திருக்கிறது.

### மருத்துவத்துறையை சிறப்பாக நடத்தும் மா.சு.!

இந்த டயாலிசிஸ் முறையை ஏழைகளுக்கு இலவசமாகக் கொடுத்திருக்கிறார் எனது சகோதரர் மா.சுப்பிரமணியன் அவர்கள். இந்தத் துறையை இதற்கு முன்பு இப்படி யாரும் கையாண்டதில்லை. மா.சுவிற்கும், தளபதிக்கும் எங்களது நன்றிகள். கவிஞர்கள் சார்பில், அறிவுஜீவிகள் சார்பில், கற்றவர்கள் சார்பில், ஏன் எங்கள் பாமர மக்களின் சார்பில், நாங்களும் பாமர மக்கள்தான், கீழிலிருந்து வந்தவர்கள் சார்பில் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகளையும், தமிழ்நாட்டு மக்களின் சார்பில் நன்றியையும், ஒருசேர காணிக்கையாக்குகிறோம். நீங்கள் நல்லது செய்து வருகிறீர்கள். நல்லவர்கள் நீங்கள் வாழ்க என்று வாழ்த்துகிறோம்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை இப்போது ஏன் நேசிக்கிறேன் என்பதை சொல்லியாக வேண்டும். நான் நினைத்தேன், என்னைப் போன்றவர்கள் நினைத்தார்கள். உள்ளொன்று வைத்து, புறமொன்று பேச எங்களுக்குத் தெரியாது. அதனால்தான் நாங்கள் இன்றும் கவிஞர்களாக இருக்கிறோம். நான்கூட தப்பாக நினைத்தேன்.

பெரியார் வந்தார். பெரியாரை ஈடுசெய்ய அண்ணா வந்தார். அண்ணாவை ஈடுசெய்ய கலைஞர் வந்தார். கலைஞர் வந்தபோது உயர்மட்டத் தலைவர்களுக்கு சந்தேகம் இருந்தது. கீழ்மட்டத் தலைவர்களுக்கு இல்லை. அவரோடு இணையாகப் பழகியவர்கள். அவரோடு சற்றே மூத்தவர்கள். அவருடைய ஆழம் தெரிந்தவர்கள். அகலம் புரிந்தவர்கள். அவரோடு வந்தவர்கள் தன்னைவிட முன்னேறிவிடுவானோ? என கலைஞரைப் பார்த்து சந்தேகப்பட்டார்கள். 45 வயதில் மூத்தவர்களையெல்லாம் தாண்டி, தி.மு.கழகத்தில் 5வது இடத்திலிருந்த தலைவர் எப்படி முதலமைச்சராக முடியும்? முதலமைச்சரானால் எப்படி செயலாற்ற முடியும்? எந்தளவிற்கு செயலாற்ற முடியும்? எல்லாவற்றையும்விட கட்சியை எப்படிக் காப்பாற்ற முடியும்? என்று கலைஞரைப் பார்த்து சகத் தோழர்கள் சந்தேகப்பட்டார்கள். 1967, 1968, 1969ஆம் ஆண்டுகளில், 1969இல் கலைஞர் முதலமைச்சரானதற்குப் பிறகு அந்த சந்தேகத்தைப் பத்தாண்டுகளில் முறியடித்துக் காட்டினார்.

### எதிலும் வெல்லும் நம் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

இதே சந்தேகம் தளபதிமீது எல்லோருக்கும் இருந்தது. இவர் எப்படி கலைஞர் இடத்தை ஈடுசெய்வார்? இவர் எப்படி தமிழ்நாட்டை ஆள்வார்? கலைஞரைப் போன்ற பேச்சாற்றல், கலைஞரைப் போன்ற எழுத்தாற்றல் இல்லாத ஒருவர் எப்படி இந்த ஆட்சியைத் தக்க வைப்பார்? கட்சியைக் காப்பாற்றுவார்? என்று சகத் தோழர்கள், சகத் தலைவர்கள், தோழமைக் கட்சியின் தோழர்கள், மற்றக் கட்சியின் தலைவர்கள், கழகத்திலிருந்த கட்சியினர், மூத்தவர்கள், நல்லவர்கள் எல்லோருமே சந்தேகப்பட்டார்கள்.

கலைஞர் கட்சிக்கும் தலைவர். ஆட்சிக்கும் தலைவர் என்பதை நிரூபிக்க பத்தாண்டுகள் தேவைப்பட்டது. ஆனால் எங்கள் தளபதி, நான் கட்சிக்கும் தலைவன். ஆட்சிக்கும் தலைவன் என்பதை நிரூபிக்க நான்காண்டுகளே போதுமானதாக இருக்கிறது. ஸ்டாலின் வென்றுவிட்டார்.

**தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து**

**மன்னுயிர்க் கெல்லாம் இனிது**

என்பது வள்ளுவர் வாக்கு. கலைஞர் இப்போது இருந்திருந்தால், “மகனே ஸ்டாலின்! என்னையே நீ தாண்டிவிட்டாய்! நீ வாழ்க!” என்று வாழ்த்தியிருப்பார். அந்த வாழ்த்தை தந்தை சொல்ல வேண்டிய வாழ்த்தை, சகோதரர்கள் நாம் சொல்லுவோம். தளபதி வென்றுவிட்டார் என்று நாம் சொல்வோம். தளபதியின் கையில் தமிழ்நாடு பத்திரமாக இருக்கிறது என்று சொல்வோம்.

நான் தளபதியை எதற்காக நேசிக்கிறேன் என்றுசொன்னால், பெரியார் காட்டிய பகுத்தறிவுப் பாதையில், அண்ணா கொண்ட கொள்கை உறுதியை, கலைஞர் கொண்ட கொள்கை உறுதியை; ஒரு துளியையும் சிந்தாமல், சிதறாமல் எடுத்துச்சொல்கிற வள்ளவன் தளபதி ஸ்டாலின் என்பதை இந்த நாடு அறிந்துகொண்டிருக்கிறது.

### முதல்வர் மு.க.ஸ்டாலினின் கொள்கை உறுதி!

நிதி தரமாட்டாயா? அதனால் தேசியக் கல்வி கொள்கையை ஏற்றுக்கொள்வோமா? நிதி தரவில்லையென்றால் போ, தேசிய கல்விக்கொள்கையை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்கிற உறுதிதான் மு.க.ஸ்டாலினுடைய கொள்கை உறுதி.

மும்மொழிக் கொள்கை. இந்தியாவில் எல்லா மாநிலங்களும் ஏற்றுக்கொண்டு விட்டனவா? இல்லை. தமிழ்நாடு மட்டும் ஏற்றுக்கொள்ளாது. ஏனென்றால், இருமொழி என்றக் கொள்கை அண்ணா வகுத்துக்கொடுத்தது. அந்த இருமொழிக்கொள்கையால்தான் தமிழ்நாட்டில் தமிழ் படித்தவர்கள் வாழ்கிறார்கள். தமிழ்நாட்டில் ஆங்கிலம் படித்தவர்கள் நாசாவை ஆள்கிறார்கள். மைக்ரோ சாஃப்டை ஆள்கிறார்கள். எலான் மஸ்க்கை ஆள்கிறார். அதனால் தமிழ்படித்தவர்கள் தமிழ்நாட்டில் வாழ்கிறார்கள். ஆங்கிலம் படித்தவர்கள் அயல்நாட்டில் வாழ்கிறார்கள்.

### இருமொழிக் கொள்கையே நமக்கு ஏற்றம் தரும்!

வடநாட்டில் வந்து நாங்கள் பேச வேண்டுமானால், இந்தி படிக்க மாட்டோம்.

நீ வேண்டுமானால் ஆங்கிலம் படி. உனக்கும், எனக்கும் ஆங்கிலம் பொதுமொழி. உன்தாய் மொழி இந்தி என்றால், என் தாய்மொழி தமிழ். என் தாய்மொழியை நான் படிக்கிறேன். உன் தாய்மொழியை நீ படி. இருவருக்கும் பொதுவான மொழியை இருவரும் படித்துக்கொள்வோம். எவ்வளவுத் தெளிவானத் திட்டம். இருமொழிக்கொள்கையை கண்டுபிடிப்பதற்கு அண்ணா எவ்வளவு இரவு உறங்காமல் விழித்திருந்திருப்பார். அந்த மாமனிதன். ஆகவே இருமொழிக் கொள்கையில் உறுதியாக இருக்கிற, தேசிய கல்விக்கொள்கை திணிப்பை ஏற்றுக்கொள்ளாத, இந்தித் திணிப்பை ஏற்றுக்கொள்ளாத பகுத்தறிவுக் கொள்கையைவிட்டு சிறிதும் இடம்பெயராத, மாபெரும் தலைவராக, அன்புக்குரியவராக தளபதி அவர்கள் திகழ்கிறார். “இளைஞர்கள் அவரை அப்பா என்கிறார்கள். எதிரிகள்அவரைஅப்பப்பா”என்கிறார்கள். அந்தத் தலைவனை வாழ்த்துவதற்கு இங்கு கூடியிருக்கிறோம்.

அடுத்த முறை நீ நினைவகம் சென்றால், அதிசயம் காண்பாய், அண்ணா எழுந்துவந்து, உன்னோடு கை குலுக்குவார். இருமொழிக்காக இரும்பிப்பிடித்து, அண்ணா உன்னோடு கைகுலுக்குவார். அந்த நாளுக்காக நாங்களும் காத்திருக்கிறோம். தளபதி வாழ்க. இவ்வாறு கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் உரையாற்றினார்.